# தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த திருப்பள்ளியெழுச்சி

---

## திருப்பள்ளியெழுச்சி தனியன்கள்

### திருமாலையாண்டான் அருளிச் செய்தது

தமேவ மத்வா பரவாஸுதே₃வம்
ரங்கே₃ஶயம் ராஜவத₃ர்ஹணீயம் |
ப்ராபோ₃தி₄கீம் யோ-க்ருத ஸூக்திமாலாம்
ப₄க்தாங்க்₄ரிரேணும் ப₄க₃வந்தமீடே₃ ||

### திருவரங்கப்பெருமாள் அரையர் அருளிச் செய்தது

மண்டங்குடி என்பர் மாமறையோர் மன்னிய சீர் *
தொண்டரடிப்பொடி தொன்னகரம் * - வண்டு
திணர்த்த வயல் தென்னரங்கத்து அம்மானைப் * பள்ளி
உணர்த்தும் பிரான் உதித்த ஊர்

---

## தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த திருப்பள்ளியெழுச்சி

### ஸ்ரீரங்கநாதனைத் துயில் உணர்த்தல்

** கதிரவன் குண திசைச் சிகரம் வந்து அணைந்தான் *
கன இருள் அகன்றது காலை அம்பொழுதாய் *
மது விரிந்து ஒழுகின மாமலர் எல்லாம் *
ஆனவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி **
எதிர் திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த *
இருங்களிற்றீட்டமும் பிடியொடு முரசும் *
அதிர்தலில் அலை கடல் போன்றுளது எங்கும் *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 1

கொழுங்கொடி முல்லையின் கொழு மலர் அணவிக் *
கூர்ந்தது குண திசை மாருதம் இதுவோ *
எழுந்தன மலர் அணைப் பள்ளி கொள் அன்னம் *
ஈன்பனி நனைந்த தம் இருஞ்சிறகு உதறி **
விழுங்கிய முதலையின் பிலம் புரை பேழ் வாய் *
வெள்ளெயிறு உற அதன் விடத்தினுக்கு அனுங்கி *
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 2

சுடர் ஒளி பரந்தன சூழ் திசை எல்லாம் *
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி *
படர் ஒளி பசுத்தனன் பனி மதி இவனோ *
பாய் இருள் அகன்றது பைம்பொழில் கமுகின் **
மடல் இடைக் கீறி வண் பாளைகள் நாற *
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ *
அடல் ஒளி திகழ் தரு திகிரி அந்தடக்கை *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 3

மேட்டிள மேதிகள் தளை விடும் ஆயர்கள் *
வேய்ங்குழல் ஓசையும் விடை மணிக் குரலும் *
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள் *
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை **
வாட்டிய வரி சிலை வானவர் ஏறே! *
மாமுனி வேள்வியைக் காத்து * அவபிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தி எம் அரசே! *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 4

புலம்பின புட்களும் பூம்பொழில்களின் வாய் *
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி *
கலந்தது குண திசை கனைகடல் அரவம் *
களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த **
அலங்கல் அந்தொடையல் கொண்டு அடியிணை பணிவான் *
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா! *
இலங்கையர் கோன் வழிபாடு செய் கோயில் *
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே 5

இரவியர் மணி நெடும் தேரொடும் இவரோ? *
இறையவர் பதினொரு விடையரும் இவரோ? *
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ? *
மருதரும் வசுக்களும் வந்து வந்து ஈண்டி **
புரவியோடு ஆடலும் பாடலும் தேரும் *
குமர தண்டம் புகுந்து ஈண்டிய வெள்ளம் *
அருவரை அனைய நின் கோயில் முன் இவரோ? *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 6

அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் இவையோ? *
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ? *
இந்திரன் ஆனையும் தானும் வந்திவனோ? *
எம்பெருமான்! உன கோயிலின் வாசல் **
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க *
இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான் *
அந்தரம் பார் இடம் இல்லை மற்றிதுவோ? *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 7

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க *
மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா *
எம்பெருமான் படிமைக் கலம் காண்டற்கு *
ஏற்பன ஆயின கொண்டு நன்முனிவர் **
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ? *
தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி *
அம்பர தலத்தில் நின்று அகல்கின்றது இருள் போய் *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 8

** ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி *
யாழ் குழல் முழவமோடு இசை திசை கெழுமி *
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள் *
கந்தருவர் அவர் கங்குலுள் எல்லாம் **
மாதவர் வானவர் சாரணர் இயக்கர் *
சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான் *
ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 9

** கடி மலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ? *
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ? *
துடி இடையார் சுரி குழல் பிழிந்து உதறித் *
துகில் உடுத்து ஏறினர் சூழ் புனல் அரங்கா! **
தொடை ஒத்த துளவமும் கூடையும் பொலிந்து *
தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி என்னும்
அடியனை * அளியன் என்று அருளி உன் அடியார்க்கு
ஆட்படுத்தாய்! * பள்ளி எழுந்தருளாயே! 10

**அடிவரவு:** கதிர் கொழு சுடர் மேட்டு புலம்பின இரவியர் அந்தரம் வம்பவிழ் ஏதம் கடி அமலன்

**தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்**